# 15

# ஆவியானவர் இயேசுவை எவ்வாறு மகிமைப்படுத்துகிறார்?

## [யோவான் 16]

*“அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்” (வசனங்கள் 14, 15).*

மேல்வீட்டில் இயேசு, தமது அப்போஸ்தலர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களில், தாம் அவர்களை விட்டுப் பிரிந்து சென்ற சில நாட்களில் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அவர் வாக்களித்தார். மிகமேன்மையான மூன்று முக்கிய பணிகளை நிறைவேற்ற ஆவியானவரின் பிரசன்னம் அவர்களுடன் இருந்தது என்று யோவான் 16ம் அதிகாரம் சுட்டிக்காண்பிக்கிறது. முதலாவது அவர், இயேசுவின் ஊழியம் மற்றும் வாழ்வு பற்றி உலகத்திற்கு உணர்த்துவார் (வசனங்கள் 8-11). இரண்டாவது அவர், அப்போஸ்தலர்களினால் செய்யப்பட இருந்த உலகளாவிய சுவிசேஷ ஊழியத்திற்கு அத்தியாவசியமான வழிநடத்துதலை அருளுவார் (வசனம் 13). மூன்றாவது அவர் இயேசுவை மகிமைப்படுத்துவார் (வசனங்கள் 14, 15).

“மகிமைப்படுத்துதல்” என்ற வார்த்தை, இயேசுவின் உள்ளான நற்தன்மைகள், தெய்வீகத்துவம் மற்றும் இரட்சிக்கும் இயல்பு ஆகியவற்றை அறியச் செய்தலைக் குறிக்கிறது. ஆவியானவரின் இந்த வெளிப்படுத்தல் கிறிஸ்துவுக்கு வழிபாடு, துதி மற்றும் மகிமை ஆகியவற்றை மறைமுகமாகக் கொண்டுவரும். ஆவியானவர் தம்மையே மகிமைப்படுத்த அல்ல, ஆனால் அப்போஸ்தலர்களும் இந்த உலகமும், கிறிஸ்துவையும் உலகத்திற்கு அவர் கொண்டுவந்த இரட்சிப்பையும் நோக்கி வரும்படி வழிநடத்தவே அனுப்பப்பட்டார்.

கலந்துரையாடலின் இந்தப்பகுதியில் (வசனங்கள் 14, 15) இயேசு, தம்மை ஆவியானவர் எவ்வாறு மகிமைப்படுத்துவார் என்பதைப்பற்றித் தமது அப்போஸ்தலர்களுக்கு விரித்துரைத்தார்.

### அவரது வலியுறுத்தம்

ஆவியானவர் இயேசுவின் வெளிப்பாடுகளை வலியுறுத்துவதன் மூலமாக அவரை மகிமைப்படுத்துவார் என்று கூறி இயேசு இந்தக் கலந்துரையாடலைத் தொடங்கினார். இயேசு, “அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் ...” என்று கூறினார். கிறிஸ்து செய்திருந்தவற்றின் மீது- அவரது போதனை, ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மீது - கட்டி எழுப்புவதில், அறியப்பட்ட எல்லாவற்றிற்கும், கிறிஸ்துவின்

மூலம் கிடைக்கப்பெற்ற மாபெரும் இரட்சிப்பைப் பற்றி விளக்கமளித்தல், அமுல்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் தனிசிறப்பை ஏற்படுத்துவார்.

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் பிற்பாடு "*கிறிஸ்த*-வர்கள்" என்று அழைக்கப்பட இருந்தனர் (காண்க நடபடிகள் 11:26). தேவன் தமது நித்திய நோக்கத்திற்குள் பூமியில் உள்ளவர்களை வழிநடத்தும்படி கிறிஸ்துவை அனுப்பி இருந்தார். இயேசு வந்து மரணபரியந்தமும் பிதாவிற்குக் கீழ்ப்படிந்தவராக இருந்ததால், அவர் மிகவும் மேன்மைப்படுத்தப்பட்டார் மற்றும் கிறிஸ்தவ உலகத்தின் "கர்த்தர்" ஆக்கப்பட்டார். பவுல் பின்வருமாறு எழுதினார்:

> ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப்பியர் 2:9-11).

பரிசுத்த ஆவியானவர் தமது ஏவுதல் மூலமாக, இயேசு நிறைவேற்றி இருந்த எல்லாவற்றின் நித்திய முக்கியத்துவத்தை அறிவிப்பார். என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் இயேசுவின் ஊழியமே ஆவியானவரின் வலியுறுத்தமாக இருக்கும்.

## அவரது விளக்கம்

இத்துடன் கூடுதலாக இயேசு, தாம் செய்திருந்தவற்றைப் பற்றிய விளக்கங்களைத் தருவதன் மூலம் தம்மை ஆவியானவர் மகிமைப்படுத்துவார் என்று கூறினார். இயேசுவின் வார்த்தைகள், "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு *அறிவிப்பதினால்*" என்பதாக இருந்தன (16:14; என்னால் வலிறுத்தப்படுகிறது). இயேசு பிரிந்து சென்ற வேளையில், அவரது ஊழியம் மற்றும் இராஜ்யம் ஆகியவற்றைப் பற்றிய விபரங்களைக் குறித்து அப்போஸ்தலர்கள் இன்னமும் தெளிவற்றவர்களாக இருந்தனர். அவற்றைப் பற்றி அவர்கள் அறிந்தும் அவற்றைப் பற்றி இயேசு பேசியதை அவர்கள் கேள்விப்பட்டும் இருந்தனர், ஆனால் அவரது திட்டங்களைப் பற்றிய அவர்களின் புரிந்து கொள்ளுதலில் அவர்கள் வெற்றிடங்களைக் கொண்டிருந்தனர், அவற்றை ஆவியானவர் மாத்திரமே நிரப்பிப் பண்படுத்த முடிந்தது. ஒருவேளை அவர்கள் அவர் பரத்துக்கேறுதல் பற்றிய சாட்சியத்தின் வழியில் இருந்திருந்தும். அவர்கள் இன்னமும் அவரது இராஜ்யத்தின் இயல்பைப் பற்றிக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர் (நடபடிகள் 1:7, 8). ஆவியானவர், அவர்களுக்கு வெளிப்படுத்துதலை அருளியதாலும், இயேசு அவர்களுக்குக் கூறியிருந்தவற்றை அவர்களின் மனங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் "அறிவிப்பார்." "அறிவித்தல்" என்ற வார்த்தை விபரங்களை அறிவித்தலின் நுண்கருத்தைக் கொண்டுள்ள (*anangello* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.

பரிசுத்த ஆவியானவர் அவர்களின் உதவியாளராகி (14:26), அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி அவர்கள் ஏற்கனவே கேள்விப்பட்டவற்றை அவர்களின் சிந்தைகளுக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது. அவர்,

அப்போஸ்தலர்களின் வாழ்விலும் தேவனுடைய திட்டத்திலும் கிறிஸ்துவின் ஊழியம் கொண்டிருக்க வேண்டிய முக்கியமான மைய இடத்தைக் கொடுப்பார்.

## அவரது உயர்த்தப்படுதல்

ஆவியானவர் இயேசுவை உயர்த்துவதின் மூலமாக அவரை மகிமைப்படுத்துவார். இயேசு அப்போஸ்தலர்களிடத்தில், ‘‘பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்’’ என்று சுட்டிக்காண்பித்தார் (16:15). பிதாவின் சித்தத்தின் நிறைவைச் செயல்படுத்தவே இயேசு அனுப்பப்பட்டிருந்தார், அவர் பிதாவின் திட்டத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியின் சாராம்சமானார். ‘‘தேவனுடைய சகல பரிபூரணமும்’’ இயேசுவுக்குள் தங்கியிருந்தது (எபேசியர் 3:19). அவருக்குள் மக்கள் ‘‘பரிபூரணமாக்கப்பட’’ முடிந்தது (கொலோசெயர் 2:10). முழுமையான தேவத்துவத்தின் பிரதிநிதித்துவமாகவும் நிறைவேற்றமாகவுமே இயேசு இந்த பூமிக்கு வந்தார்: “ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது” (கொலோசெயர் 2:9).

இயேசு தமது பிதாவினிடத்தில் இருந்து தாம் பெற்றவற்றையே போதித்திருந்தார். இயேசுவை நெருக்கமாகவும் புரிந்துகொள்ளுதலுடனும் உற்றுநோக்கியவர்கள் அவருக்குள் பிதாவைக் கண்டிருந்தனர் (யோவான் 14:9), மற்றும் இயேசு தமது ஊழியத்தில் செய்திருந்தவற்றைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள், அவரை அனுப்பியதில் பிதாவின் தெய்வீகத்துவ காரணத்தைக் கண்டிருந்தனர். உலகப்பிரகாரமான ஒரு சரீரத்தை எடுத்துக்கொள்ளுதல் என்பது இயேசுவை மனித சூழ்நிலைகளுக்குள் வரக்கூடியவராகவும் அவரது பிதாவின் சித்தத்தைச் செய்யக்கூடியவராகவும் ஆக்கிற்று (எபிரெயர் 10:7).

## முடிவுரை

பரிசுத்த ஆவியானவர், இயேசு நிறைவேற்றி இருந்தவற்றை வலியுறுத்துதல், ஆண்டவர் இந்த பூமியில் இருந்தபோது கூறிய மற்றும் எல்லாவற்றைப் பற்றியும் தெளிவுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் இயேசுவை மகிமைப்படுத்துவார். அவர், நோக்கங்கள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றில் பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலான ஒருமைத்தன்மை பற்றி விளக்கங்கள் அளிப்பதால் கிறிஸ்துவை மேன்மைப்படுத்துவார்.

---

*“அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

*வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்” (நடபடிகள் 2:4-6).*

*"ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" (நடபடிகள் 2:36).*